

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் தாயார் திருமதி அம்சவேணி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி சென்னை, சாலிகிராமத்திலுள்ள எல்.கே. சுதீஷ் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (7.10.2025) நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தே.மு.தி.க.பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தாயார் திருமதி அம்சவேணி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி சாலிகிராமத்திலுள்ள எல்.கே. சுதீஷ் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (7.10.2025) நேரில் சென்று, திருவுடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

# முதலீட்டிற்கு உகந்த இடம் தமிழ்நாடு - தனித்துவத்தை உறுதி செய்யும் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ! ... முதல் பக்கத் தொடர்ச்சி

● கோவை வரப்பட்டியில், 360 ஏக்கரில் 'பாதுகாப்பு தொழிற்துறைப் பூங்கா' அமைக்கப் பட்டு வருகிறது.

● விமான பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ள நேரடியாக ஓடுதள அணுகு வசதியுடன் கூடிய வான்வெளிப் பூங்கா, சூலூரில் 200 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது.

● திருச்சியில் 90க்கும் மேற்பட்ட MSME நிறுவனங்கள் இயந்திரவியல் உற்பத்தித் துறையில் தங்கள் தொழில்களை பெருக்க TREAT அமைப்பு உதவுகிறது.

● சென்னைக்கு அருகில் வல்லம் வடகாலில் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை வான்வெளி நிறுவனங்க ளுக்காக அமைக்கப்பட்டு வரும் 'ஏரோஹப்' என்ற திட்டம் முடிவடையும் நிலையில் இருக்கிறது.

இப்படி, இதுபோன்ற அனைத்துத் திட்டங்களும், முதலீடுகளை ஈர்த்தல் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் இந்தத் துறையில் இந்தியாவின் தற்சார்பை உறுதி செய்தல் ஆகியவற்றில் தமிழ்நாட்டின் தனித்துவத்தை உறுதி செய்கிறது.

ஓசூரில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர் மாநாட்டில் வானூர்தி மற்றும் பாதுகாப்பு துறையில் ஈர்க்கப்பட்ட முக்கியமான முதலீடுகள் உலகளவில் உற்பத்தித் துறையில் ஓசூர் நகரத்தின் பங்கை உறுதி செய்கிறது. இந்த முதலீடுகள், தமிழ்நாட்டின் தொழிற்துறைச் சூழல், திறமையான மனிதவளம் மற்றும் சிறப்பான உற்பத்தி சங்கிலிக்கு சான்றாக இருக்கிறது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத் திட்டத்தை செயல்படுத்த தொடங்கியதில் இருந்து, இதுவரை 23 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதில், 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப் பட்டிருக்கிறது.

2032க்குள், 75 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க நாங்கள் இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த வழித்தடத்தில் இருக்கும், ஒவ்வொரு நகரமும் தனித்துவமான மையங்களாக விளங்குகிறது.

சென்னை என்பது ஆராய்ச்சி மற்றும் கடற்படை அமைப்புகளுக்கான மையமாகவும், கோயம்புத்தூர் - நுண்பொறியியல் திறனுக்கான மையமாகவும், ஓசூர் - வான்வெளி மற்றும் மின்னணு தொழில்நுட்ப மையமாகவும், சேலம் – உயர் தொழில்நுட்பப் பொருட்கள் மையமாகவும், திருச்சி – கனரக இயந்திர உற்பத்தி மையமாகவும் இருக்கிறது. இவை எல்லாம் ஒன்றாக சேர்த்து, தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முதலீட்டிற்கு உகந்த இடமாக விளங்குவதைக் காட்டுகிறது.

தூத்துக்குடியில் இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வைத்து விண்வெளித் துறையில் பொருளாதார வளர்ச்சிக்கான தெளிவான திட்டப்பாதையை நாங்கள் வகுத்திருக்கிறோம். இந்திய விண்வெளித் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். சென்னை காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம், சூலூர் மற்றும் வல்லம் வடகால் வான்வெளி பூங்காக்கள் தூத்துக்குடியில் அமையவுள்ள விண்வெளிப் பூங்கா ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் பாதுகாப்புத் துறைக்கும் உறுதுணையாக இருக்கிறது.

**மூதலீடுகள் செய்ய காத்திருக்க வேண்டாம்!**

இந்த மாநாட்டில், பங்கேற்றிருப்பவர்களிடம் நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டில் உங்களை கவரும் தொழில் சூழல் இருக்கிறது. திறமையான இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மட்டுமல்ல, MSME நிறுவனங்களின் பங்கும் பெரிய அளவில் இருக்கிறது. அதில், 700க்கும் மேற்பட்டவை வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் செயல்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய காத்திருக்க வேண்டியதில்லை. தமிழ்நாடு இப்போதே தயாராக இருக்கிறது.

**இன்று இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். செயல் வேகத்துடன், உறுதியுடன், உங்கள் இலக்குகளை நிறைவேற்ற தமிழ்நாடு முழு ஆதரவளிக்கும். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான முன்னணித் தளமாக தமிழ்நாடு திகழ வேண்டும்! அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை!**

பாதுகாப்பு அமைச்சகம், D.R.D.O. மற்றும் நம்முடைய பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் தொழில்நுட்பம், திறன் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி, இந்த பயணத்தில் எங்களோடு இணைந்து செயல்படுகிறார்கள். புதிய கூட்டுத் திட்டங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வான்வெளி, கடல், விண்வெளி துறைகளில் புதிய தொழில் முயற்சிகளுக்கான தொடக்க மேடைதான், இந்த மாநாடு!

இன்று இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். செயல் வேகத்துடன், உறுதியுடன், உங்கள் இலக்குகளை நிறைவேற்ற தமிழ்நாடு முழு ஆதரவளிக்கும். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான முன்னணித் தளமாக தமிழ்நாடு திகழ வேண்டும்! அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை!

வானூர்தி, விண்வெளி, கப்பல் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதுமைகள் நிறைந்த ஏற்றுமதிக்கு உகந்த தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க பாதுகாப்புத் துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும். இது, ஒரு புதிய காலத்தின் தொடக்கமாக அமையட்டும்! இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழ்நாடு திகழட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# நன்னிலம் அரசு கல்லூரியில் சமூகநீதி விடுதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்!

*திருவாரூர், அக்.9-*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சமூகநீதி விடுதியினை திறந்து வைத்ததனை தொடர்ந்து, மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.. வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் ஆகியோர் குத்து விளக்கேற்றி வைத்து, சமூகநீதி விடுதியினை பார்வையிட்டார்கள்.

டீதுசுஊஹு (பாபு ஜெகஜீவன்ராம் சத்ரவாஸ் யோஜனா) திட்டத்தின் கீழ் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில், கல்லூரி மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தரைதளம் (4814.24 சதுர அடி), முதல் தளம் (4186.82 சதுர அடி) மற்றும் மாடிபடி அறை (286.22 சதுர அடி) என மொத்தம் 9287.28 சதுர அடி பரப்பளவில் விடுதி அமையப்பட்டுள்ளது.

மேற்படி விடுதியின் ஒவ்வொரு தங்கும் அறையிலும் மாணவியருக்கு தனித்தனியாக கட்டில், படிப்பதற்கான மேசை, இருக்கைகள் மற்றும் ஒப்பனை அறை வசதிகள், நூலக அறை, பணியாளர் தங்கும் அறை, காப்பாளினி அறை, பொருள் வைப்பு அறை, உணவு தயாரிப்பதற்கான சமையலறைக் கூடம், எரிபொருள் அறை, உணவு உண்ணும் கூடம் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. மேலும் கூடுதலாக மாணவியர்களின் பாதுகாப்பிற்காக முள்கம்பியுடன் கூடிய சுற்றுச்சுவர் வசதியும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் வே.மனோகரன், நகரச் செயலாளர் பக்கிரிசாமி, பேரூராட்சித் தலைவர் ராஜசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், விடுதி மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், கவுண்டச்சிபுதூர் ஊராட்சி, மாருதி நகரில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய திட்டப்பணிகளை பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். இதில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பி.எல்.ஏ 2, பி.எஸ்.சி. கூட்டம்

# ஒன்றிய, நகர, பேரூரில் நடத்தி குறிப்பேடுகளை வழங்கிடுக!

## மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டத் தீர்மானம்!

*மயிலாடுதுறை, அக்.9-*

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் நடை பெற்றது. கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என். இளையபெருமாள், செல்ல சேது.ரவிக்குமார். மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜெ. பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த விஜயகுமார், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன் நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி(எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் தலைமைக் கழகத்தால் பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகளை வழங்கிட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி குறிப்பேடுகளைப் பயன்படுத்துவது குறித்து எடுத்துக் கூறி குறிப்பேடுகளை வழங்கிட வேண்டும் என்றும், செப்டம்பர் மாதம் 17ம் தேதி கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து கலந்து கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள். கழகத்தினர் அனைவருக்கும் நன்றியையும். வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத் தலைவர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெல்வோம் என்பதற்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி ஆகிய 3 தொகுதிகளிலும் கழக அரசின் சாதனை களை பொது மக்களிடம் எடுத்துக் கூறி கழக வெற்றிக்கு உழைத்திடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முருகனின் நான்காம் படைவீடு சுவாமி மலையில் இருந்து அறுபடை திருக்கோவிலுக்கும் ஆன்மீக சுற்றுலா செல்லும் (5) ஐந்து மிதவைப் பேருந்துகளை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்து ஆன்மீகப் பயணம் மேற்கொள்ளும் பக்தர்களுக்கு தேவையான உபகரணங்கள் கூடிய பையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சு.ப.தமிழழகன், டி.கணேசன், ஜெ.சுதாகர், உமாதேவி, தக்கார் டி.ஆர். சுவாமிநாதன், எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியம், வைஜெயந்தி சிவக்குமார் மற்றும் விஹா மோகன், நெடுஞ்செழியன், பி.கேசவன், கோபால், கோபி ஆகியோர் கலந்துகொண்டனர்.